


புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | செப்டம்பர் 02, 2021 | புரட்சி 20 | முழக்கம் 27 | விலை: ரூ.3.00


# ‘அய்.அய்.டி.யில்’ ஜாதிப் பாகுபாடுகள்

***‘அய்.அய்.டி.’ பார்ப்பனப் பிடிக்குள் சிக்கி, சாதியப் பாகுபாடுகள் தலைவிரித்தாடு கின்றன என்று பதவி விலகிய பேராசிரியர் விபின் விட்டில் குற்றம் சாட்டியுள்ளார்.***

கடந்த ஜூன் 30ஆம் தேதி தேசிய பட்டிய லினத்தவர் ஆணையம் சார்பில் சென்னை அய்.அய்.டிக்கு ஒரு நோட்டீஸ் அளிக்கப் பட்டது. அதில் போதுமான அளவில் எஸ்சி மற்றும் எஸ்டி பேராசிரியர்களை நியமிக்காதது தொடர்பாக விளக்கம் அளிக்க கோரப்பட் டிருந்தது. இந்த நோட்டீஸ் சென்ற அடுத்த நாளே அங்கே வேலை பார்க்கும் பேராசிரியர் விபின் விட்டில் அங்கு சாதிய பாகுபாடு காட்டப்படுகிறது என்று பகிரங்கமாகக் கூறிவிட்டு அய்.அய்.டி.யிலிருந்து பதவி விலகிப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தினார்.

அவர் அனுப்பிய மெயிலில். இந்தச் சாதியப் பாகுபாடு அய்.அய்.டி.யில் அதிகாரத்தில் இருப்பவர் களிடமிருந்து வந்தது. அவர்களது அரசியல் சார்புநிலை பாலினம் அத்தனைக்கும் அப்பாற்பட்டு அவர்களுடைய சாதிய மனநிலை உள்ளது எனக் குறிப்பிட்டிருந்தார்.

அய்.அய்.டியின் சாதியப்பாகுபாடு குறித்து அங்கு படிக்கும் மாணவர்கள் அவ்வப்போது சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து வந்தாலும் அங்கே பேராசிரியர்களிடமும் சாதியப் பாகு பாடு பார்க்கப்படுகிறது என்பது ஆதாரப் பூர்வமான உண்மை. அய்.அய்.டிக்களிடமிருந்து பெறப்பட்ட ஆர்.டி.ஐ. தகவலின்படி மொத்த மிருக்கும் 23 அய்.அய்.டிக்களில் 22ல் அதிக பட்சமாகவே 6 பட்டியல் பழங்குடிப் பேராசிரியர்கள்தான் இருக்கிறார்கள். இத்தனை ஆண்டுகளில் ஒட்டு மொத்தமாகவே 6 பட்டியல் பழங்குடிப் பிரிவைச் சேர்ந்த ஆசிரியர்கள்தான் நியமிக்கப்பட்டிருக் கிறார்கள். இவற்றில் 18 அய்.அய்.டிக்களில் பத்துக்கும் குறைவான பட்டியல் சமூகப் பேராசிரியர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். 7 அய்.அய்.டிக்களில் 10க்கும் குறைவான இதரபிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக் கிறார்கள். தற்போது விபின் பிரபல ஆங்கில ஆன்லைன் இதழ் ஒன்றுக்கு மனம் திறந்த பேட்டி ஒன்றை அளித்திருக்கிறார்

அதில் தனக்கு நேர்ந்த சாதிய பாகுபாடுகள் குறித்து பட்டியலிட்டுள்ளார்.

“நான் அய்.அய்.டியில் பேராசிரியராகச் சேர்வதற்கு முன்பே அங்கே என்மீது சாதியப் பாகுபாடு தொடங்கியிருந்தது. நான் பணியில் சேர்ந்ததும் ஆறு -ஏழு மாதங்களில் இயக்குநர் மற்றும் டீன்களுக்கு ஒரு மெயில் அனுப்பினேன். அதில் அய்.அய்.டியில் நியமிக்கப்பட்டிருக்கும் பேராசிரியர் களின் சாதிவாரி விவரம் குறித்துக் கேட்டிருந்தேன். நான் மெயில் அனுப்பிய சில நொடிகளிலேயே பலர் அதற்கு பதில் அளித்திருந்தார்கள். ஒருவர், பேராசிரியர்களின் சாதிவாரி விவரம் கேட்டால் அது அய்.அய்.டிக்கே அழிவு காலமாகிவிடும் என்றார். ஏன் சாதிவாரி விவரத்தைக் கேட்கிறீர்கள்?, இப்போது இருக்கும் ஆசிரியர்களே திறமை வாய்ந்தவர்கள் தானே! எனக் கேள்வி எழுப்பினார்கள். இத்தனைக்கும் நான் வெறும் புள்ளிவிவரத்தை மட்டும்தான் கேட்டேன்.நான் இடஒதுக்கீட்டுக்காகத் தான் கேட்கிறேன் என அவர்கள் நினைத்துக் கொண்டார்கள்.

அய்.அய்.டியில் வேலை பார்த்த காலத்தில் சில நேரங்களில் என் சாதிப்பெயரைக் கேட்பார் களோ என அச்சமாக இருக்கும்.சில நேரங்களில் நானே தவிர்த்துவிடுவேன். இங்கே பேராசிரி யர்கள் மற்றும் டீன்களைப் பொருத்தவரை அய்.அய்.டிக்களுக்கான பேராசிரியர் தேர்வு எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்பதாகத்தான் உள்ளது. அங்கே நியமனத்தில் மெரிட் என்பது துளியும் இல்லை. சாதி அடிப் படையில், நம்பிக்கையின் அடிப்படையில், பாலின மற்றும் மத அடிப்படையில்தான் தேர்வு செய்யப்படுகிறார்கள், அய்.அய்.டியின் இயக்குநர் பார்ப்பனர் அதனால் அங்கே அவர் கீழ் தேர்வு செய்யப்பட்ட டீன்களும் அதே சமூகத்தினர். இங்கே பேராசிரியர்கள் தேர்வுக்கு என்று தனியாக எதுவும் நுழைவு தேர்வு வைப்பதில்லை. அங்கே மெரிட் நியமனங்கள் இல்லை சாதி ரீதியான நியமனங்கள்தான் உள்ளன. இதனை அவர்களுக்குப் புரிய வைக்க மிக நீண்ட மெயில் ஒன்றை அனுப்பினேன். அதன் தொடர்ச்சிதான் தற்போது அங்கிருந்து நான் வெளியேறும் அளவுக்குக் கொண்டு விட்டிருக்கிறது.தற்போது அய்.அய்.டி நிறுவனத் தின் குறைதீர்க்கும் கமிட்டியில் எனது புகாரைப் பதிவு செய்துள்ளேன். இப்படியொரு கமிட்டி இருப்பதே எனக்கு 2020இல்தான் தெரிய வந்தது. அதுவுமே பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் துக்குப் புகார் அளிப்பதற்காக நான் முயற்சி செய்தபோது இந்த கமிட்டி குறித்து தெரிய வந்தது.

இந்திய அரசு மேற்கொண்ட போதுமான முயற்சிகளால் கல்லூரியில் பாலியல் வன்முறை என்றால் அது தொடர்பான புகார்களை பதிவு செய்ய குழு இருப்பது குறித்து போதுமான விழிப்புணர்வு இருக்கிறது. ஆனால் சாதிரீதியான பிரச்னைகளுக்கு கல்லூரிகளில் இருக்கும் குழுக்கள் குறித்து போதிய விழிப்புணர்வு தரப்படுவதில்லை. தற்போது குறை தீர்க்கும் குழுக்கு அனுப்பியுள்ள மெயிலில் கூட இது போன்ற கல்விநிறுவனங்களில் படிக்கும் விளிம்பு நிலை வகுப்பு மக்கள் அங்கே அனுபவிக்கும் பிரச்னைகள் குறித்து அறிய அரசு ஒரு தனி குழுவை நிறுவ வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளேன். இதன் அடுத்தகட்டமாக பாலியல் வன்முறை புகார் களுக்கான விசாகா குழு போல ஒவ்வொரு அய்.அய்.டி கல்வி நிறுவனங்களிலும் எஸ்.சி., எஸ்.டி., மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தனி குறைதீர்க்கும் கமிட்டி நிறுவப்படவேண்டும் என்பதுதான் இதன் நோக்கம் என்றார்.

அய்.அய்.டி. இயக்குநராக பட்டியல் பிரிவு அல்லது பிற்படுத்தப்பட்ட பிரிவிலிருந்து ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்; பார்ப்பனர்கள் மட்டுமே இயக்குநராகி வருகிறார்கள் என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

## செப்.1 முதல் 16 வரை நூல் திறனாய்வு — சிந்தனைத் தொடர் கருத்தரங்கம்

***பெரியார் பிறந்த நாளையொட்டி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 16 நாள் தொடர்ந்து நூல் திறனாய்வு மற்றும் கருத்தரங்கத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அறிவியல் மன்ற ஒருங்கிணைப்பாளர் ஆசிரியர் சிவகாமி, கழக இணையதளம் – முகநூல் பிரிவினரோடு இணைந்து இதற்கான ஏற்பாடுகளை ஒழுங்கு செய்துள்ளார்.***

தந்தை பெரியாரின் 143 ஆவது பிறந்தநாளை ஒட்டி, திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், செப்டம்பர் 1 முதல் செப்டம்பர் 7 வரை புத்தக வாசிப்பும் நூல் திறனாய்வும் நடைபெறுகிறது. கழகத் தோழர்கள் புத்தகத்தை வாசித்து அதன் கருத்துக்களை விளக்கி பேசவுள்ளனர்.

01.09.2021 - திராவிட முருகன் - “தமிழர்கள் இந்துக்களா”

02.09.2021 - மங்கலம் சந்தோஷ் - “கடவுளும் அதன் தன்மையும்”

03.09.2021 - கோவை வெங்கட் - “செங்கல்பட்டு சுயமரியாதை மாநாடு”


04.09.2021 - மேட்டூர் கனலி - “பெண்மை என்றொரு கற்பிதம்”

05.09.2021 - திருச்செங்கோடு தர்சினி - “இனி வரும் உலகம்”

06.09.2021 - அன்னூர் மனோ - “ஆதிக்க சாதிகளுக்கு மட்டுமா பெரியார்”

07.09.2021 - பொள்ளாச்சி சபரி - “தீண்டாமையை ஒழிக்கும் வழி”

நூல் திறனாய்வைத் தொடர்ந்து, செப்டம்பர் 8 முதல் செப்டம்பர் 16 வரை கருத்தரங்கங்கள், “பெரியார் பார்வையில்” என்ற பொது தலைப்பின் கீழ் பல்வேறு தலைப்புகளில் நடைபெற வுள்ளது.



08.09.2021 - கோவை நிர்மல் - “சட்டம் மற்றும் நீதி”

09.09.2021 - ஜெயப்பிரகாஷ் - “கல்வி மற்றும் ஆசிரியர்கள்”

10.09.2021 - இரண்யா - “கலைகளும் சமூக மாற்றமும்”

11.09.2021 - கனல்மதி - “கிராமங்கள்”

12.09.2021 - திருப்பூர் தேன்மொழி - “காதலும் திருமணமும்”

13.09.2021 - காஞ்சிபுரம் இரவிபாரதி - “தமிழ்”

14.09.2021 - விஷ்ணு - “திருக்குறள்”

15.09.2021 - எட்வின் - “அறிவியல் வளர்ச்சியும் அறிவியல் மனப்பான்மையும்”

16.09. 2021 - மேட்டூர் மதிவதனி - “தொழிலாளர் நலன்”

நூல் திறனாய்வு மற்றும் கருத்தரங்கங்கள் செப்டம்பர் 1 முதல் செப்டம்பர் 16 வரை தொடர்ச்சியாக, மாலை 7 மணிக்கு தொடங்கி நடைபெறும். “திராவிடர் விடுதலைக் கழகம்” முகநூல் பக்கத்தில் நேரலை செய்யப்படும்.

**– திராவிடர் விடுதலைக் கழகம்**

தலையங்கம்

## மாநில உரிமைகளைப் பறிக்கும் ‘தேசிய மருத்துவ ஆணையம்’

தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை முற்றாக சீர்குலைக்கின்ற தொடர்ச்சியான போக்கில் மோடி ஆட்சி ஈடுபட்டுக்கொண்டே இருக்கிறது. 2014 ஆம் ஆண்டு மோடி ஆட்சிக்கு வந்தவுடன், மருத்துவ மேற்படிப்பில் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை முற்றிலுமாக ஒழித்துக்கட்டினார். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தவுடன், முதலமைச்சர் மு.க ஸ்டாலின் இதற்காக சட்டப் போராட்டம் நடத்தி மேற்பட்டப்படிப்பில் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை அனைத்து மாநில பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் மீட்டுக் கொடுத்த ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு செயலை செய்து முடித்தார்.

இப்போது தேசிய மருத்துவ ஆணையம் மற்றொரு அதிரடியான நடவடிக்கையில் ஈடுபட்டு இருக்கிறது. மருத்துவக் கல்லூரியில் இனி மாணவர்கள் சேர்க்கை அனைத்தையும் தேசிய மருத்துவ ஆணையமே ஏற்கும் என்ற முடிவுக்கு அது வந்திருக்கிறது.

MBBS, Diplamo, MD, MS, DM, MCh போன்ற பட்டப்படிப்பு, முது நிலை, முதுநிலை சிறப்புப் பாடத்திட்டப் பிரிவுகளில் மாணவர் சேர்க்கை அத்தனையையும், தேசிய மருத்துவ ஆணையம் எடுத்துக்கொள்கின்ற ஒரு முடிவுக்கு வந்து இதற்காக கருத்து கேட்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியிருக்கிறார்கள். இந்த சுற்றறிக்கை கூட மாநில அரசிடம் கருத்து கேட்கவில்லை. துறை சார்ந்த நிபுணர்களிடம் கருத்து கேட்கவில்லை. ’தமிழ்நாட்டு மக்களிடம் கருத்து கேட்கும் இந்த சுற்றறிக்கை’ என்ற நாடகத்தை இவர்கள் அரங்கேற்றியிருக் கிறார்கள்.

தமிழ்நாட்டு முதலமைச்சர் இந்த சுற்றறிக்கையைக் கண்டித்து இதை உடனே திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறார். இப்படியே நிலைமை போய்க் கொண்டிருந்தால் இனி தமிழ்நாட்டு அரசு மருத்துவமனைகளில், தனியார் மருத்துவ மனைகளில் எப்படி நோயாளிகளை சேர்க்கலாம், எந்த நோயாளிகளை சேர்க்கலாம் போன்றவற்றைக்கூட நாங்கள் தான் தீர்மானிப்போம், தமிழ்நாட்டில் மருத்துவ அமைச்சராக யார் வர வேண்டும் என்பதைக்கூட நாங்கள்தான் தீர்மானிப்போம் என்று ’தேசிய மருத்துவ ஆணையம்’ ஒரு முடிவுக்கு வந்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கு எதுவுமே இல்லை.

தமிழ்நாட்டில் மருத்துவ மேற்படிப்பு படிக்கின்ற மாணவர்களுக்கு உள் ஒதுக்கீட்டு உரிமைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. ஏற்கெனவே அரசு மருத்துவமனைகளில் பணியாற்றிக் கொண்டே மேற்பட்டப் படிப்பு படிக்கின்ற மாணவர்களுக்கு ஒதுக்கீடு, கிராம சுகாதார நிலையங்களில் பணி செய்ய வருகின்றவர்களுக்கு ஒதுக்கீடு என்று சமூக நீதி அடிப்படையில் பின்பற்றி வருபவைகள் எல்லாம் இந்த நடைமுறை மூலம் முற்றாக ஒழிக்கப் படுகின்ற நிலைமை உருவாகும். அதுமட்டுமில்லாமல் மத்திய அரசே இப்படி மாணவர்களை தேர்வு செய்வதின் மூலம் ஏராளமாக வடநாட்டு மாணவர்கள்,தமிழ்நாட்டு அரசு செலவில் இயங்கிவருகின்ற கல்லூரிகளில் படித்து, முழுமையாக பயன்படுத்தி படித்து பயனடையப் போகிறார்கள்.


தமிழ்நாட்டில், தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரிகளில் படிக்கிறவர்கள், தமிழ்நாட்டில் இரண்டு ஆண்டு பணியாற்ற வேண்டும் என்ற ஒப்பந்தம் ஏற்கெனவே இருக்கிறது. அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுதான் வடநாட்டு மாணவர்கள் இங்கே வருகிறார்கள். ஆனால் படிப்பு முடிந்தவுடன் அவர்கள் சொந்த மாநிலத்திற்கு தப்பி ஓடிவிடுகிறார்கள். 2017 ஆம் ஆண்டு மட்டும் 280 மாணவர்கள் இதுபோல் தப்பி ஓடி இருக்கிறார்கள் என்று தகவல்கள் கூறுகின்றன.

எனவே, தமிழ்நாட்டில் படித்துவிட்டு வடநாட்டில் வேலை பார்க்கின்றவர்களுக்கும், தமிழ்நாட்டின் உள் ஒதுக்கீடு என்ற சமூகநீதியை குலைப்பதற்கும் இவையெல்லாவற்றையும் விட தமிழ்நாடு அரசின் மாநில உரிமையை பறிப்பதற்குமான ஆபத்தான இந்த முறையை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும். நீட் தேர்வைத் தொடர்ந்து ஒவ்வொன்றாக இப்படி மாநில உரிமையையும், சமூக நீதியையும் குலைத்துக் கொண்டு வருகின்ற ஒன்றிய அரசுக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுக்க மக்கள் முன் வரவேண்டும்.

# பஞ்சாங்கத்தைக் கிழித்த பகுத்தறிவு கலைஞர்

தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம் தோன்றிய பத்தாண்டுகளுக்குப் பிறகு தான் தமிழில் பேசும் படங்கள் வெளிவந்தன. அந்த கால கட்டங்களில் திரைப்படங்கள் என்றாலே புராண இதிகாசங்களும், சமூக அக்கறை அற்ற பிற்போக்குத்தனம் நிறைந்த கதைகளும்தான் இடம் பெற்றிருக்கும். சுயமரியாதை இயக்கம் சமூகக் களத்தில் வேகமாக வளர வளர, அதன் தாக்கம் திரைப்படங்களிலும் எதிரொலிக்கத் தொடங்கியது. இந்த காலகட்டத்திற்கு சற்று முன்பே மேலை நாடுகளில் சார்லி சாப்ளின், லாரல் ஹார்டி போன்ற நகைச்சுவைக் கலைஞர்களின் திரைப்படங்கள் பெரும் வெற்றி அடைந்தன.

ஆனால் தமிழில் கலைவாணரின் வருகைதான் முதன்முதலில் திரைப்படங்களில் நகைச்சுவைக்கு என்று தனி அடையாளத்தை பெற்றது. கலைவாணரின் நகைச்சுவை சிரிக்க வைப்பதுடன் சிந்திக்கத் தூண்டுவதாகவும் இருந்தது. திராவிட இயக்கத்தின் கொள்கைகளையும், பொதுவுடமை தத்துவங்களையும் நகைச்சுவை வழியாக மக்களிடையே எளிமையாக கடத்தினார். நடிப்பது மட்டுமின்றி சொந்தமாக கதை அமைப்பது, பாடல்கள் எழுதுவது, உரையாடல்கள் எழுதுவது என திரைத் துறையில் முக்கியத்துவம் பெற்றிருந்தார்.



1936இல் வெளிவந்த சதிலீலாவதி என்ற படம்தான் கலைவாணர் நடித்த முதல் திரைப்படம். எம்.ஜி.ஆர்., டி.எஸ்.பாலையா போன்றோருக்கும் இதுதான் முதல் திரைப்படம். ஆனால் “மேனகா” என்ற திரைப் படம் தான் கலைவாணர் நடித்து முதலில் வெளிவந்த திரைப்படம். இரண்டு படங்களுமே சமூக கருத்தாக்கங்களை கொண்ட படங்களாகவே இருந்தன.

சதிலீலாவதி படத்தில் கலைவாணர் முடடை உணவை சாப்பிட்டுக் கொண்டே, சாராயம் குடிப்பது போல ஒரு காட்சி வரும். படத்தில் பார்ப்பனர் தோற்றத்தில் வரும் கலைவாணர் சாராயத்தை கந்தர்வ பானம் எனக் கூறிக்கொண்டே ருசித்துக் குடிப்பார். ஆதி பார்ப்பனர்கள் யார் என்பதை சுட்டிக்காட்டும் விதமாக இப்படி ஒரு காட்சியை நுணுக்கமாக வைத்திருப்பார். திராவிடர் கழகப் பிரச்சார மேடைகளுக்கு இணையாக தனது ஒவ்வொரு திரைப்படங்களிலும் பகுத்தறிவு சிந்தனையை தூண்டும் வசனங்களை, பாடல்களை துணிச்சலாக கலைவாணர் பேசினார், பாடினார்.

அதற்கு சில உதாரணங்களை சொல்ல வேண்டும். இன்பவல்லி என்ற திரைப்படத்தில் கலைவாணர் பஞ்சாங்கத்தை கிழிக்கும் ஒரு காட்சி.

“மந்திரத்தின் பெயரைச்சொல்லி
மாயக்காரர் தான்
தந்திரமாய் செய்த ஏட்டை- கிளியே
தாட்சண்யம் பார்க்காமல் கிளி(ழி)யே”

இந்தப் பாடலைப் பாடிக் கொண்டே பஞ்சாங்கத்தைக் கிழித்தார் கலைவாணர்.

அதிக அளவில் வறுமையும் பஞ்சமும் நிலவிய அந்த காலகட்டத்தில் கூட சிலைகளுக்கு பாலும் பழமும் கொண்டு அபிஷேகம் செய்வதில் பஞ்சம் இருக்கவில்லை. “மங்கையர்கரசி” என்ற படத்தில் இதையும் தனது பாடல் மூலம் கேள்விக்கு உட்படுத்தினார்.

“பாலும் பழமும் அபிஷேகம் பண்ணுவதைப் பார்
பால் இல்லை என்று சிசு பதறுவதைப் பார்”

என, பச்சிளம் குழந்தைகள் பால் இல்லாமல் இருக்கும்போது கல்லுக்கு பால் அபிஷேகம் தேவையா என்ற கேள்வியை ரசிகர்கள் மத்தியில் வைத்தார்.

அதேபோல 1939 ஆம் ஆண்டில் “திருநீலகண்டர்” என்றொரு படம் வந்தது. இந்த படத்தில் கலைவாணரும் நடிகர் டி.எஸ். துரைராஜூம் காமன் கதை சொல்லும் காட்சி. டி.எஸ். துரைராஜ் கதை சொல்லத் தொடங்கும் போது, சரஸ்வதி பிரம்மாவின் நாவில் இருப்பதாகவும், கதை சொல்ல அவள் துணை நிற்க வேண்டுமாயும் பாடுவார். உடனே கலைவாணர் அதற்கு ஒரு எதிர்ப்பாட்டு பாடுவார்.

“மறையவன் நாவில் அவள்
உறைவது நிஜமெனில்
மலஜலம் கழிப்பது எங்கே? எங்கே?"

இப்படி பகுத்தறிவு கேள்விகள் கலைவாணரின் நகைச்சுவை காட்சிகளில் வெடித்துக் கிளம்பின.

திமுக தொடங்கப்பட்டு நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு கலைஞரின் கதை, எழுத்தில் கலைவாணர் பாடி நடித்த ‘பணம்’ திரைப்படம் வெளிவந்தது. அந்த கால கட்டத்தில் திமுகவுக்கு மிகப்பெரிய பிரச்சாரமாக இந்த படம் அமைந்தது. இந்த படத்தில் கண்ணதாசன் எழுதிய

“தீனா… மூனா..?. கானா… எங்கள்
திருக்குறள் முன்னணி கழகம்
தீனா… மூனா… கானா…
அறிவினை பெருக்கிடும்
பகுத்தறிவோடு நாட்டினர் வாழ
திருக்குறள் தந்தார்
பெரியார்- வள்ளுவப் பெரியார்”

எனத் தொடங்கும் பாடல் மிகவும் பிரபலமானது. இவ்வாறு கலைவாணர் நடித்த படங்களையும், அந்த படங்கள் ஏற்படுத்திய தாக்கங்களையும் அடுக்கிக் கொண்டே போகலாம்.

“பக்த துளசிதாஸ்” என்ற படத்தின் படப் பிடிப்புக்காக கலைவாணர் புனே சென்றபோது, உடன் நடித்த டி.ஏ.மதுரம் அம்மையாரை விரும்பி அங்கேயே மணம் முடித்துக் கொண்டார். மதுரம் அம்மையாருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் தொடக்கத்தில் கலைவாணரை அறவே பிடிக்காமல் இருந்த நிலையில் அவரின் உதவும் குணம் மிகவும் ஈர்க்கச் செய்தது. அதுவே இருவரும் மணம் முடித்துக் கொள்ளும் அளவிற்கு அன்பை வளர்க்க செய்தது. அதன்பிறகு இருவரும் இணைந்து படங்களில் நடித்தனர். அனைத்து படங்களுமே விமர்சன ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் பெரும் வரவேற்பைப் பெற்றன.

ஒருமுறை கலைவாணரை பார்த்து ஒருவர், மேடைப் பேச்சிலும் நடிப்பிலும் சமதர்மம் பேசி விட்டு காரில் போகலாமா? இது எப்படி நியாயமாகும் என்றார். இதற்கு மிகப் பொறுமையாக கலைவாணர் பதில் அளித்தார். “நான் காரில் போக ஆசைப்பட வில்லை. நடந்து செல்ல எவ்வளவு ஆசைபடுகிறேன் தெரியுமா? ஆனால் என்னுடைய இந்த ஆசையை நீங்கள் தான் கொன்று விடுகிறீர்கள். என் மீது கொண்ட அன்பால் என்னை தரையில் கூட நடக்க விடமாட்டேன் என்கிறீர்கள். அப்படித் தப்பித் தவறி நடந்து வந்துவிட்டால் என்னைப் பிய்த்து பிடுங்கி தின்று விடுகிறீர்கள். இதனால் நான் செல்லும் காரியங்கள் தடைபட்டு விடுகின்றன. எனவேதான் நானும் மதுரமும் காரில் போகிறோமே தவிர உடல் நோகாமல் இருப்பதற்கு அல்ல. நீங்கள் மட்டும் எங்களை ஒன்றும் செய்யாமல் இருந்து பாருங்கள். நாங்கள் இருவரும் வேர்க்கடலை, பட்டாணி, ஐஸ் ஆகியவைகளை வாங்கித் தின்று கொண்டே ஜாலியாக நடந்து வருவோம்” என்றார்.

ஆக அந்த காலகட்ட தமிழ்த் திரைத்துறையில், கலைவாணர் எந்த அளவுக்கு, மக்கள் ஆதரவு பெற்ற உச்ச நட்சத்திரமாக திகழ்ந்தார் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. தனது திரைப்பயணம் முழுவதையும் திராவிட இயக்கத்தின் கொள்கை பிரச்சாரக் களமாகவே வைத்திருந்த கலைவாணர், சொந்த வாழ்வில் அவர்மீது எந்த ஒரு அரசியல் அடையாளத்தையும் இல்லாமலேயே வைத்திருந்தார். ஆனால் 1957 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் அண்ணாவையும், கலைஞரையும் ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டார். அவர் தனது வாழ்நாளில் வெளிப்படையாக ஆதரித்த அரசியல் கட்சி திமுக மட்டுமே. இறுதிவரை மக்களும் அவரை திராவிட இயக்க திரைக்கலைஞராகவே பார்த்து அங்கீகரித்தனர்.

புராண இதிகாச குப்பைகள் படமாகி கொண்டிருந்த காலகட்டத்தில், தமிழ் திரைப்படத்தின் போக்கை மடைமாற்றிய திராவிட இயக்கக் கலைஞர்களில் கலைவாணருக்கு பெரும் பங்கு உண்டு என்பதை மறுக்க இயலாது.

(‘நிமிர்வோம்’ வாசகர் வட்ட கருத்தரங்கில் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கிய ந. பிரகாஷ் ஆற்றிய உரையிலிருந்து)

**ஆகஸ்டு 30, கலைவாணர் நினைவு நாள்**

## திருமணமுறை தேவைதானா ?

நான் பொது வாழ்க்கையில் ஈடுபட்டது முதற்கொண்டே இத்திருமணமுறைகளைப் பற்றி ரொம்ப கவலை எடுத்து சிந்தித்து வந்திருக்கின்றேன். சிந்திக்க, சிந்திக்க இத் திருமண முறையையே ஒழித்துவிடலாமா என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. திருமண முறை கூடாதது; ஒழிக்கப்படக்கூடியது என்று ஒன்றிரண்டு கூட்டங்களில் பேசியதோடு, பத்திரிக்கையிலும் எழுதியிருக்கிறேன். திருமண சம்மந்தத்தைச் சிலர், மக்களின் நல்வாழ்வுக்கேற்ற சீர்திருத்த முறை என்று கருதுகிறார்கள். சிலர் இன முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது என்கிறார்கள். இப்படிக் கருதுவதற்கெல்லாம் ஆதாரமே இல்லை என்றும், பெண்களை என்றென்றும் அடிமைகளாக வைத்திருக்கச் செய்யப்பட்ட சூழ்ச்சிதான் இத்திருமண முறை என்றும் எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன்.

**விடுதலை – 22.10.1948**



## பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து பா.ஜ.க. ஆட்சி வரை (7)

# பாகிஸ்தான் பிரிவினைக்கு யார் காரணம்?

விடுதலை இராசேந்திரன்

பிரிட்டிஷ் ஆட்சி அதிகாரத்தில் பங்கு போட்டுக் கொண்ட பார்ப்பனர்கள், சமூக சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்த நிலையில், ‘தேச பக்தர்களாகி’, ‘சுதந்திரப்’ போராட்டம் நடத்திய காங்கிரசுக்குள் புகுந்து கொண்ட வரலாறுகளைப் பார்த்தோம். எதிர்பார்த்ததுபோலவே, ‘சுதந்திரம்’ – பார்ப்பன–பனியாக்களுக்கானதாகவே இருந்தது. இதைத் தான் பெரியார் எச்சரித்தார். சுதந்திர நாளை துக்க நாள் என்றார். இந்தப் பின்னணியில் பாகிஸ்தான் எப்படி உருவானது என்ற வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.

- முஸ்லிம் லீக் - பாகிஸ்தான் தனி நாடாகப் பிரிய வேண்டும் என்ற கோரிக்கையை தொடக்கத்தில் வற்புறுத்தவே இல்லை. முழுமையான மாநில சுயாட்சி தான் தங்களது கொள்கை என்றும், முஸ்லிம்கள் அதிகம் வாழும் பகுதிகளில் தனி மாகாணங்களை உருவாக்கி ஒன்றுபட்ட இந்தியாவுக்குள் முஸ்லிம் மாகாணங்களுக்கு சுயாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும் என்றே வலியுறுத்தி வந்தது.
- 1937இல் லக்னோவில் நடந்த மாநாடு; 1938இல் கராச்சியில் நடந்த மாநாடுகளில் மாகாண சுயாட்சியை வலியுறுத்தியே தீர்மானங்கள் போடப்பட்டன.
- காங்கிரசில் இருந்த பார்ப்பனர்கள் காங்கிரசோடு இரண்டறக் கலந்து நின்ற ‘இந்து மகாசபை’யினர், இஸ்லாமியர்களோடு இணைந்து வாழ்வதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இந்தியாவில் இந்து, இஸ்லாமியர் என்று இரு இனங்கள் உண்டு. இரு இனமும் இருவேறு தேசங்கள் என்று 1935இல் சாவர்க்கார் இந்து மகாசபை மாநாட்டில் வெளிப்படையாகவே பேசினார்.
- 1937ஆம் ஆண்டு வரை முஸ்லிம்களுக்கு தனித் தொகுதி இருந்தது. (இந்தியாவிலேயே தேர்தலில் முதன்முதலாக தனித் தொகுதி ஒதுக்கீடு பெற்றவர்கள் முஸ்லிம்கள் தான்) அரசுப் பதவிகளில் தனி ஒதுக்கீடு, முஸ்லிம்கள் பெரும்பான்மை கொண்ட மாகாணங்கள் என்ற உரிமைகளை அவர்கள் பெற்றிருந் தார்கள். ஒன்றுபட்ட இந்தியாவுக்குள் முழுமையான சுயாட்சி என்ற கோரிக்கையை அரசியல் சட்டம் உறுதி செய்தால் போதும் என்பதே ஜின்னாவின் கருத்து; தனிநாடு கோரிக்கையை நோக்கி ஜின்னாவை விரட்டியது காங்கிரஸ் கட்சியிலிருந்த மதவாதிகளும் - இந்து மகாசபையினரும் தான். நேருவுக்கும் இதில் பங்கு உண்டு என்பதை மறுப்பதற்கு இல்லை. 1937ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு நேரு மேற்கொண்ட முஸ்லிம் எதிர்ப்பு அணுகுமுறையே ஜின்னா வின் தனிநாடு கோரிக்கையை தீவிரமாக்கியது.

அந்தத் தேர்தல் முடிவுகளில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த மாநிலங்களில் முஸ்லிம் களுக்கு போதிய ஆதரவு கிடைக்கவில்லை. அதே நேரத்தில் முஸ்லிம் லீக்கிற்கு சிறுபான்மையாக வாழ்ந்த மாநிலங்களில் முஸ்லீம் லீக்கிற்கு அதிக ஆதரவு கிடைத்தது. இந்த மாகாணங்களில் முஸ்லிம்கள் லீக் கட்சி சார்பின்றி சுயேச்சையாகவும் போட்டியிட்டனர். அவர்களைவிட முஸ்லீம் லீக்கினர் அதிக எண்ணிக்கையில் வெற்றி பெற்றனர். அப்போது அய்க்கிய மாகாணம் என்று அழைக்கப்பட்ட உ.பி. மாநிலத்தில் காங்கிரஸ் பெரும்பான்மை பெற்றது. ஆறு பேர் கொண்ட அமைச்சரவை அமைத்தது. 1935ஆம் ஆண்டு சட்டப்படி முஸ்லிம்கள் எண்ணிக்கைக்கேற்ப அமைச்சரவையில் இடம் தந்தாக வேண்டும். ஆனால் காங்கிரஸ் கட்சியோ வெற்றி பெற்ற இறுமாப்பில் முஸ்லிம் லீக்கினருக்கு அமைச்சரவையில் இடம்தர மறுத்து விட்டது. அனைத்து மாநிலங்களிலும் காங்கிரஸ் இப்படி திட்டமிட்டு முஸ்லிம் லீக்கைப் புறக்கணித்ததோடு தேர்தலில் தோற்றுப் போன முஸ்லிம்களுக்கும் சுயேச்சையாக போட்டியிட்ட முஸ்லிம்களையும் காங்கிரசில் சேர்த்துக் கொண்டு அமைச்சராக்கினார்கள். வெற்றி பெற்ற எல்லா முஸ்லிம் லீக்கினரும் கூண்டோடு காங்கிரசில் சேர்ந்தால், அமைச்சராக்கலாம் என்று நேரு திமிர்வாதம் பேசினார். ஜின்னா சொன்னார், “காங்கிரஸ் எங்களைக் கூட்டணி சேர அழைக்க வில்லை; தற்கொலை செய்ய அழைக்கிறது” - இதனுடைய விளைவுதான் ஜின்னா காங்கிரசின் பார்ப்பன இந்தியாவை இனியும் நம்ப முடியாது என்ற முடிவுக்குத் தள்ளப்பட்டார். பாகிஸ்தான் தனி நாடு முழக்கத்தை உயர்த்திப் பிடித்தார்.

1946இல் அரசியல் நிர்ணய சபை கூடியபோது 10 கோடி முஸ்லிம்களின் பிரதிநிதிகள் அதை புறக்கணித்தனர். வராமல் இருந்தால் போகட்டும் என்ற எண்ண ஓட்டமே நிர்ணய சபையில் மேலோங்கியிருந்தது. முஸ்லிம் லீக்கை சமாதானம் செய்து அரசியல் நிர்ணய சபைக்குள் கொண்டு வரலாம் என்று நிர்ணய சபை உறுப்பினர் எம்.ஆர். ஜெயகர் கொண்டு வந்த தீர்மானத்தை கடும் கோபத்துடன் சபை நிராகரித்தது. நேருவும் முஸ்லிம் எதிர்ப்பில் தீவிரமாகவே இருந்தார்.

இந்த வரலாற்றுப் பின்னணியில் பாகிஸ்தான் பிரிவினையின் மீது எழுந்த கோபம், அரசியலமைப்பு உருவாக்கத்திலும் எதிரொலித்தது. முஸ்லிம் லீக் மட்டுமல்ல; சோஷலிஸ்ட் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் அரசியல் நிர்ணய சபையில் இடம் பெறவில்லை. வயது வந்தோருக்கு வாக்குரிமை வழங்கி, தேர்தல் நடத்தி, அதற்குப் பிறகு அரசியல் நிர்ணய சபையை உருவாக்க வேண்டும் என்பதே சோசலிஸ்ட் கட்சி முன் வைத்த நியாயமான கோரிக்கை. இந்த நிலையில் அரசியல் நிர்ணய சபை காங்கிரஸ் கட்சியினர் நிறைந்த சபையாகவே இருந்தது. பார்ப்பனர்கள், நிலப் பிரபுக்கள், சுதேச சமஸ்தானப் பிரதிநிதிகள், இந்தி வெறியர்கள், நிறைந்த இந்த சபை பற்றி அரசியல் நிர்ணய சபை ஆலோசகராக செயல்பட்ட பி.என். ராவ், “அரசியல் நிர்ணய சபையினர் அனைத்து விவகாரங்களும் காங்கிரஸ் கட்சியின் சொந்த வீட்டு விவகாரகமாகவே கருதப்பட்டது என்று குறிப்பிடுகிறார். (The whole thing was treated as the family affair of the Indian National Congress) அதன் விளைவுகள் என்ன?

- 1935ஆம் ஆண்டு பிரிட்டிஷ்காரர்கள் உருவாக்கித் தந்த சட்டத்தில் இடம் பெற்றிருந்த ‘கூட்டாட்சி’ என்ற வார்த்தை சுதந்திர இந்தியாவின் சட்டத்தில் காணாமல் போய்விட்டது. திட்டமிட்டே நீக்கப்பட்டது.
- அம்பேத்கர் எந்த மாநிலமும் பிரிந்து போய்விடக் கூடாது என்பதற்காகவே ‘யூனியன்’ என்ற சொல்லை சேர்த்திருக்கிறோம் என்று வெளிப்படையாகவே அறிவித்தார். கூட்டாட்சி என்ற சொல்லை சேர்க்கக் கோரி கொண்டு வரப்பட்ட இரண்டு திருத்தங்களும் தள்ளுபடி செய்யப்பட்டன.
- (அதற்குப் பிறகு மொழி வழி மாநிலங்கள் குறித்து அவர் எழுதிய நூலில் இந்தியாவுக்கு தெற்கில் ஒரு தலைநகரம் கூடுதலாக வேண்டும் என்றும், வடநாடு பிற்போக்கானது; தென்னாடு முற்போக் கானது என்றும் எழுதி ஒரே இந்தியாவுக்குள் இருந்த முரண்பாடுகளை சுட்டிக்காட்டினார்)
- இந்தியாவில் ‘யூனியன்’ என்கிற மத்திய அரசுதான் அழிக்க முடியாதது. ஆனால் மத்திய அரசோ மாநிலங்களை படைக்கிற ‘பிரம்மா’வாகவும், காக்கின்ற ‘திருமாலாக’வும் அழிக்கின்ற ‘சிவனாக வும்’ இருக்கிறது. மத்திய அரசுக்கு இத்தகைய அதிகாரங்கள் இருப்பதால் மாநிலங்கள் சம உரிமை படைத்தவையாக உருவாக்கப்பட வில்லை” என்கிறார், அரசியல் சட்ட ஆய்வாளர் அசோக்சந்தா (Federalism in India - நூல்).
- மத்திய அரசு, மாநில அரசு அதிகாரப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மாநில அரசு உரிமைகளைப் பறிக்கும் பொதுப் பட்டியலையும் உருவாக் கினார்கள்.


‘சுதந்திரம்’ - பார்ப்பன பனியாக்களிடம் கைமாறிய பிறகு முதல் அடி வகுப்புவாரி உரிமை மீது விழுந்தது. 1920ஆம் ஆண்டு முதல் நீதிக் கட்சி ஆட்சிகளில் வளர்த்தெடுக்கப்பட்ட வகுப்புவாரி பிரநிதித்துவம் என்ற பங்கீட்டு உரிமையை எதிர்த்து பார்ப்பனர்கள் உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றங் களிலும் வழக்குத் தொடர்ந்தது செல்லாது என்ற தீர்ப்பைப் பெற்றனர். அரசியல் வரைவுக் குழுவில் இடம் பெற்றிருந்த அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரே மரபுகளுக்கு மாறாக வகுப்புவாரி உரிமையை எதிர்த்து ஒரு வழக்கறிஞராக நேர் நின்று வாதாடினார். தமிழ்நாட்டில் பெரியார் போர்ச் சங்கு ஊதினார். தி.மு.க.வும் களத்தில் குதித்தது. முதன்முறையாக அரசியல் சட்டம் திருத்தப்பட்டு, சமூக கல்வி ரீதியான பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு உறுதிப்படுத்தப் பட்டது. பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயே சென்னை மாகாணத்தில் மட்டும் அஞ்சல் துறை, துறைமுகம் போன்ற மத்திய அரசுக்கு உட்பட்ட துறைகளில் இடஒதுக்கீடு பின்பற்றப்பட்டு வந்தது. ‘சுதந்திர இந்தியாவில்’ ஒரே ஆண்டில் பார்ப்பனர்கள் நீதிமன்றம் சென்று இந்த உரிமையைப் பறித்தார்கள்.

1967ஆம் ஆண்டுக்குப் பிறகு தான் மாநிலங் களில் காங்கிரஸ் அல்லாத கட்சிகள் அதிகாரத்துக்கு வரத் தொடங்கின. அதற்கு முன் மத்தியிலும் மாநிலத்திலும் காங்கிரஸ் கட்சிகளே ஆட்சி செய்த காரணத்தால் மாநில உரிமைகள் பற்றிய கவலையோ எதிர்ப்புகளோ எழவில்லை.

1967இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு சென்னை மாகாணத்துக்கு முதல்வர் அண்ணா, தமிழ்நாடு என்று பெயர் சூட்டியதோடு தமிழ்நாட்டிலிருந்து இந்தியை விரட்டி இரு மொழிக் கொள்கையை அறிவித்தார். வேத மந்திரங்களை மறுக்கும் திருமணங்களான பெரியார் அறிமுகப்படுத்திய சுயமரியாதைத் திருமணம் முன் தேதியிட்டு சட்ட வடிவம் பெற்றது. தமிழகம் தொழில் துறையில், நிதித் துறையில், விவசாயத் துறைகளில் தொடர் வண்டி சேவை போன்ற போக்குவரத்துத் துறைகளில் புறக்கணிப்பதற்கு எதிராக உரிமைக் குரல்கள் அரசு சார்பில் வெடித்துக் கிளம்பின. மாநில சுயாட்சி முழக்கங்கள் கேட்கத் தொடங்கின.

(தொடரும்)

## மணிச் சத்தத்துடன் மாட்டுவண்டியில் பயணித்தார் அய்யன் காளி



அய்யன் காளி 1863ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28இல்திருவனந்தபுரத்திலிருந்து 13 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பெருங்காட்டுவிளா என்ற ஊரில் பிறந்தார். 1889 முதல் அய்யன் காளி பொது வழி உரிமைக்கான போராட்டங்களை முன்னெடுக்க ஆரம்பித்தார். தாழ்த்தப்பட்ட மக்கள் நடக்கக்கூடாது என்று கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட தெருக்களில் மணிச்சத்தத்துடன் மாட்டுவண்டியில் பயணம் செய்தார். 1912 இல் பட்டியல் வகுப்பு மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட நெடுமங்காடு சந்தையில் அய்யன்காளி நுழைந்தார். அதன் பிறகு அனைவரும் சந்தையில் அனுமதிக்கப் பட்டார்கள்

1904இல் பட்டியல் வகுப்பு மக்களுக்காக ஒரு பள்ளிக்கூடத்தை வெங்ஙானூரில் ஆரம்பித்தார். 1904இல் புலையர்களுக்கு அடிப்படைக்கூலி நிச்சயிக்கப்படுவதற்காக திருவிதாங்கூர் முழுக்க ஒரு வேலை நிறுத்தப் போராட்டத்தை அய்யன்காளி ஆரம்பித்தார். 1905இல் இந்தபோராட்டம் வெற்றிகரமாக முடிவுக்கு வந்தது. 1905இல் அய்யன்காளி சதானந்த சாமிகளின் உதவியுடன் சாதுஜன பரிபாலன சங்கம் என்ற பேரில் ஓர் அமைப்பை உருவாக்கினார். இதன் மூலம் தன் மக்களுக்கான கல்வி முயற்சிகளை ஒருங்கிணைத்தார். மலையாளி மெம்மோரியல் அளித்த கோரிக்கையின்படி திருவிதாங்கூர் சட்ட சபையான ஸ்ரீமூலம் பிரஜா சபையில் ஈழவர், புலையர் போன்றோருக்கு இடமளிக்கப்பட்டது.

1911 டிசம்பர் ஐந்தாம் தேதி அய்யன்காளி பிரஜா சபையில் உறுப்பினராக ஆனார். 1941இல் இறப்பது வரை அங்கே அவர் பணியாற்றினார். அரசுப் பணிகளில் புலையர்களுக்கான ஒதுக்கீடுக்காக 1916ல் அய்யன்காளி குரலெழுப்பினார். 1916 இல் இதற்காக சாதுஜனபரிபாலினி என்ற இதழை வெளியிட ஆரம்பித்தார். 1924 இல் நாராயண குருவின் இயக்கமும் காங்கிரஸும் இணைந்து டி.கெ. மாதவன் தலைமையில் நிகழ்த்தப்பட்ட வைக்கம் சத்தியாக்கிரகத்தில் அய்யன்காளி முக்கியமான பங்கு வகித்தார். வைக்கம் போராட்டத்தின் இறுதி வெற்றியாக 1936 இல் ஆலயப் பிரவேச சட்டம் அமலானபோது வெற்றி விழாவில் காந்தியுடன் அய்யன்காளியும் கலந்து கொண்டார். அய்யன்காளி 1940 இல் புலையர் மகாசபை என்ற அரசியல் அமைப்பை உருவாக்கினார். 1941 ஜூன் 18 அன்று மறைந்தார்.

(ஆக. 28, அய்யன் காளி பிறந்த நாள்)
நன்றி : ‘தீக்கதிர்’ நாளேடு

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## செப்.17இல் கழகக் குடும்பங்களின் சந்திப்பு : ஈரோடு வடக்கு மாவட்டக் கழக முடிவுகள்

22.8.2021 அன்று மாலை 6 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோடு வடக்கு மாவட்டத்தின் கலந்துரையாடல் கூட்டம் நாகப்பன்இல்லத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்குக் கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன் தலைமையேற்க, மாவட்டத் தலைவர் நாத்திக சோதி, மாவட்டச் செயலாளர் வேணுகோபால் முன்னிலை வகித்தனர். கலந்துரையாடலில்:

1. மறைந்த கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மடத்துகுளம் மோகனுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
2. வருகின்ற செப்-17 அறிவுலக ஆசான் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவினை அனைத்து ஒன்றிய பகுதிகளிலும் சிறப்பாக நடத்துவது எனவும், அதனையொட்டி செப்-19 அளுக்குளி பகுதியில் தோழர்களின் குடும்ப சந்திப்பு நிகழ்வும், அளுக்குளி தங்கம் தலைமையில் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்வும் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.
3. கழகத்தின் பவானி ஒன்றிய புதிய அமைப்பாளராக செல்வம் நியமிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
4. தந்தை பெரியார், தனது நெஞ்சில் தைத்த முள்ளாக இருந்த அனைத்து சாதியினரும் அர்ச்சகர்கள் ஆகலாம் எனும் சட்டத்தை நிறைவேற்றி பயிற்சி முடித்த அர்ச்சகர்களுக்கு பணி நியமனம் வழங்கிய தமிழ்நாடு அரசுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
5. 'புரட்சி பெரியார் முழக்கம்' புதிய சந்தாக்களை அதிக அளவில் திரட்டுவது

ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கலந்துரையாடல் கூட்டத்தில் அனைத்து ஒன்றிய கழகத்தின் பொறுப்பாளர்கள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## பெரியார் பிறந்த நாள்; திருப்பூர் மாநகர கழக முடிவுகள்

திருப்பூர் மாநகர திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கலந்தாய்வு கூட்டம் 29.08.2021 மாலை மாஸ்கோ நகர கழகத் தோழர் மாதவன் அலுவலகத்தில், கழகப் பொருளாளர் சு.துரைசாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில்,

1) பெரியார் பெருந்தொண்டர் மடத்துக்குளம் மோகன் மறைவுக்கு மாநகர கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கல் தெரிவிப்பதுடன் அவர் விட்டுச் சென்ற பணிகளை தொடர்ந்து முன்னெடுப்பது.

2) வரும் செப்டம்பர் 17 தந்தை பெரியார் பிறந்த நாள் அன்று கழகத்தின் சார்பில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யும் நிகழ்வுக்கு தோழர்கள் திரளாகக் கலந்து கொள்வது.

3) செப்டம்பர் 19 அன்று அம்மாபாளையம், அனுப்பர்பாளையம், ஆத்துப் பாளையம், பெரியார் காலனி, மாஸ்கோ நகர், கண்ணகிநகர், இரங்கநாதபுரம், இராயபுரம், சந்தை பேட்டை, குளத்துப்பாளையம், வீரபாண்டி பிரிவு ஆகிய இடங்களில் பெரியார் படத்திற்கு மரியாதை செய்யும் நிகழ்வு நடத்துவது.

ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பொள்ளாச்சியில் மடத்துக்குளம் மோகன் படத்திறப்பு




மறைந்த தலைமைக்குழு உறுப்பினர் மடத்துக்குளம் இரா.மோகன் மற்றும் திராவிடர் கழக மறைமலை நகர தலைவர் துரைமுத்து ஆகியோரது நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக பொள்ளாச்சி பர்வாணா அரங்கத்தில் 29.08.2021 மாலை 4 மணிக்கு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கோவை மாவட்ட செயலாளர் வே.வெள்ளிங்கிரி தலைமை வகித்தார். கழகத் தோழர் தா. இராசேந்தின் முன்னிலை வகித்தார்.

மடத்துக்குளம் இரா.மோகன் படத்தை ஆதித் தமிழர் பேரவை தலைமை உறுப்பினர் தி.சே. கோபால், துரை முத்து படத்தை மக்கள் விடுதலை முன்னணி தலைவர் க. மாரி முத்து திறந்து வைத்தனர்.

பின்னர் திராவிடர் கழகம் வடிவேல், மாரிமுத்து, திராவிட இயக்க தமிழர் பேரவை ராஜ்குமார், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் ஆறுச்சாமி, தமிழ்நாடு திராவிடர் கழகம் சிகான், திமுக திராவிட செல்வம் மற்றும் கழகத் தோழர்கள் பாண்டியநாதன், வினோதினி மற்றும் சபரிகிரி உள்ளிட்ட தோழர்கள் தங்களது நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். நிகழ்விற்கு கழகத் தோழர் ஆனந்த் நன்றி கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மணி, சிவா, நடராஜ், கதிர், ஆனந்த், தவசி, விஜயன், முத்துக்குமார் மற்றும் தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

## மருத்துவர்கள் அரும்பு - பாலாஜி இணையேற்பு விழா



சென்னை நங்கநல்லூர் குகா எனும் மா. குகானந்தன் - அ. தமிழ்ஒளி இணையரின் மகள் மருத்துவர் அரும்பு, எம்.டி. - பண்ருட்டி மருத்துவர் கு. இளங்கோவன்- இ.முத்தமிழ் இணையரின் மகன் மருத்துவர் இ. பாலாஜி, எம்.எஸ். ஆகியோரின் வாழ்க்கை இணையேற்பு விழா 26.8.2021 வியாழன் காலை 10 மணியளவில் சென்னை மணப்பாக்கம் ஜீவன்ஜோதி மகாலில் சிறப்புடன் நடைபெற்றது.

திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்று இணையேற்பு நிகழ்வை உறுதிமொழி கூறி நடத்தி வைத்தார். மணமக்களை வாழ்த்தி தோழர் மதுரை வரதராசன், தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் ஆர்.எஸ். பாரதி, திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினர். நிகழ்வினை தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் தொகுத்து வழங்கினார்.

கழகத் தோழர்களும் கொள்கை உணர்வாளர்களும் பெருமளவில் பங்கேற்றனர். மேடையில் பெரியார் படத்துக்குக் கீழே, 'தன் மதிப்பு வாழ்வே தலை நிமிர்ந்த வாழ்வு' என்ற முழக்கங்கள் எழுதப்பட்டிருந்தன. மணவிழாவுக்கு வருகை தந்தோருக்கு திராவிடர் விடுதலைக் கழக வெளியீடான 'திராவிட இயக்க வரலாற்றுச் சுருக்கம்' (தஞ்சை மருதவாணன்தொகுத்தது) நூல் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

மணமகனின் தந்தை 'குகா' எனும் குகானந்தன், அவரது துணைவியார் தமிழ் ஒளி, மத்திய அரசுத் துறையான சுங்கத்துறை அதிகாரிகளாகப் பணியாற்றி, விருப்ப ஓய்வு பெற்றவர்கள். மணமகளின் தந்தை குகன், அரசுப் பணியில் இருந்தாலும் 1980களிலிருந்தே திராவிடர் கழகம், பெரியார் திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகத்தில் உணர்வோடும் கொள்கையோடும் தன்னை இணைத்துக் கொண்டு பயணித்து வருபவர்.

மணமகள்-மணமகன் இருவருமே மருத்துவர் மற்றும் மருத்துவ மேல் பட்டப் படிப்புகளில் அரசு நடத்தும் 'தகுதி'த் தேர்வுகளை எழுதி, நல்ல மதிப்பெண்களோடு தேர்ச்சி பெற்றவர்கள் ஆவார்கள். மணமகன் இ. பாலாஜி, எம்.எஸ். முடித்துவிட்டு, அரசு மருத்துவராகப் பணியாற்றி வருகிறார். மணமகள் சென்னை அரசு மருத்துவக் கல்லூரியில் 'எம்.டி.', மேல் பட்டப் படிப்பு படித்து வருகிறார்.

பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசுகையில்:

"பெரியார் போராடிய சமூக நீதிக் கொள்கையின் வெற்றிக்கு சான்றாக, இங்கே இந்த மணமக்கள் இருக்கிறார்கள். பார்ப்பனர்கள் பேசும் 'தகுதி - திறமை'யிலும் தங்களால் போட்டியிட்டு வெற்றி பெற முடியும் என்று நிருபித்து இருக்கிறார்கள். மருத்துவர்கள், மருத்துவ சேவைகளோடு தங்கள் கடமைகளை முடித்துக் கொள்ளாமல் சமுதாயத்துக்குப் பயன்படக் கூடிய வாழ்க்கையை வாழ்ந்து காட்டுவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அதுவே பெரியார் வலியுறுத்திய அர்த்தமுள்ள வாழ்க்கைக்கான அடையாளம்" என்றார்.

மணமக்கள் சார்பில் கழக ஏட்டின் வளர்ச்சிக்கு ரூ.10,000/- நன்கொடை வழங்கப்பட்டது.

## மறைமலை நகர் பெரியார் தொண்டர் துரை முத்து முடிவெய்தினார்



செங்கல்பட்டு மாவட்டம் மறைமலை நகரில் மறைந்த தோழர் துரைமுத்துக்கு கழகத் தலைவர், கழகப் பொதுச் செயலாளர் ஆகியோர் நேரில் இறுதி மரியாதை செலுத்தினர்.

திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் குகன் தந்தையும் சென்னை, மறைமலை நகர் நகர திராவிடர் கழகத் தலைவருமான துரைமுத்து (51) 26.08.2021 அன்று திடீர் உடல் நலக் குறைவால் முடிவெய்தினார்.

மறைந்த தோழருக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் நேரில் இறுதி மரியாதை செலுத்தி தோழரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர்.

அப்போது தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தென் சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், மாவட்டச் செயலாளர் உமாபதி, தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகரன், இணையதள பொறுப்பாளர் விஜயகுமார், செங்கல்பட்டு மாவட்டத் தலைவர் தெள்ளமிழ்து, செயலாளர் தினேஷ் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் உடன் சென்றனர்.

தோழர் துரைமுத்து, திராவிடர் கழகப் பொறுப்பாளராக இருந்தார். பெரியாரிய அம்பேத்கரிய இயக்கங்களுக்கு பெரிதும் கொள்கை உணர்வோடு உதவுவதும் ஊக்குவிப்பதும் அவரது தனிச் சிறப்பு.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 2nd September 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN